**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.**

**OS.No.79/2021**

2022-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ம் நாள் வெள்ளிக்கிழமை **வா.சா1**-ன் வாக்கு மூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) கிரேடு - 1 பென்ச் கிளார்க் திரு.பாலசுப்பிரமணியன் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அப்துல் காதர் | **வட்டம்** | |
| **த/பெ** | வாவா ராவுத்தர் | **சமயம்** | |
| **கிராமம்** | | **வயது** | |

**முதல் விசாரணை:(28.10.2022)**

நான் இவ்வழக்கில் வாதியாவேன். தாவா வழக்கின் விவரம் எனக்குத் தெரியும். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதை நான் படித்துப் பார்த்து கையொப்பமிட்டேன்.

என் தரப்பில் 15.03.2019-ம் தேதியன்று வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.1-ஆகவும்,

23.04.2020-ம் தேதியன்று வாதிக்கு அஜ்மீர்களஞ்சியம் எழுதிக்கொடுத்த கிரைய சம்மதப்பத்திரம் அசல் வா.சா.ஆ.2-ஆகவும்,

19.06.2020-ம் தேதியன்று வாதி, பிரதவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது அலுவலக நகல் வா.சா.ஆ.3-ஆகவும் குறியீடு செய்யப்பட வேண்டுகிறேன். என் நிரூபண பிரமாண வாக்குமூலத்தையும், என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களையும் ஏற்றுக்கொண்டு பிராதுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணை:** (வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது).